**இராஜபாளையம் நகராட்சி**

**28.03.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 ஹேவிளம்பி வருடம் பங்குனி மாதம் 14ம் தேதி 2018ம் வருடம் மார்ச் மாதம் 28ம் தேதி புதன் கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை– திருமதி.எஸ்.சசிகலா, எம்.எஸ்.சி., தனி அலுவலர்**

1) இந்நகராட்சிக்கு உட்பட்ட 2016–2017ம் ஆண்டு கணக்கினை தயார் செய்து முடித்த வகைக்கு ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) திரு.வி.சீனிவாசன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். (பி3/608/2018)

அ.கு– அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.432 அனுமதிக்கப்பட்டது**

2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு சுகாதாரப் பணிகளுக்கு தினக்கூலியாக பணியாற்றி வரும் DBC பணியாளர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து அவர்களின் ஊதியத்தில் EPF தொகை மற்றும் நிர்வாக பங்கு தொகை பிடித்தம் செய்யக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5 அவர்களின் 09.01.2017ம் கடித எண்.1819/2016/எல்.3.2ல் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே DBC பணியாளர்களாக இந்நகராட்சியில் 5/2016 முதல் நாளது தேதி வரை பணியாற்றி வருவதால் அவர்களது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள EPF தொகையுடன் நகராட்சி நிர்வாக பங்கு தொகையை பொது நிதியிலிருந்து 13.16% வீதம் 149 பணியாளர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/3498/2013)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. DBC ஆக பணியாற்றும் 149 பணியாளர்களுக்கு 5/2016 முதல் நகராட்சி நிர்வாக பங்கு தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.433 அனுமதிக்கப்பட்டது**

3) இந்நகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட வார்டுகளில் கழிப்பறையில் உள்ள செப்டிக் டேங்க் நிறைந்துள்ளதால் அதனை சுத்தம் செய்யும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1141/2018)

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண் 12ல் உள்ள பெண்கள் கழிப்பறை | 1 |
| 2 | அண்ணாநகர் சிவன் கோவில் அருகில் உள்ள ஆண் மற்றும் பெண்கள் கழிப்பறை | 2 |
| 3 | வார்டு எண். 8ல் உள்ள போஸ் பார்க் அருகில் உள்ள ஆண் மற்றும் பெண்கள் கழிப்பறை | 2 |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.434 அனுமதிக்கப்பட்டது**

4) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Swachh Survekshan 2018ன் கீழ் துப்பரவு பணி தர ஆய்வு மேற்கொள்ளப்படும் பொருட்டு அதற்கு தேவையான ஆவணங்கள் தயார் செய்யவும் புகைப்படங்கள் ஜெராக்ஸ், பிரிண்டிங், ஸ்கேனிங் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் பணிகள் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/– க்கு மன்றத்தின் அனுமதி பெற ஆணை வேண்டப்படுகிறது. (எச்1/1179/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவுத் தொகையினை Swachh Survekshan 2018 நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.435 அனுமதிக்கப்பட்டது**

5) இந்நகராட்சி பகுதியில் Swachh Survekshan 2018ன் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு விளிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பிளக்ஸ் போர்டுகள் தயார் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.26,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1178/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவுத் தொகையினை Swachh Survekshan நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.436 அனுமதிக்கப்பட்டது**

6) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN67V9423 JCB வாகனத்திற்கு பழுது பணிகள் பார்க்கும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. (எச்1/423/2018)

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ்<br>1, சங்கரன் கோவில் ரோடு,<br>இராஜபாளையம் | ரூ.78,000/– |
| 2 | M/s.இராமகிருஷ்ணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>2/73 மாரியம்மன் கோவில் தெரு,<br>இராஜபாளையம் | ரூ.82,500/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி குடுத்துள்ள ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ் நிறுவனத்தாருக்கு வெலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.437 அனுமதிக்கப்பட்டது**

7) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN67K3011 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2018ம் ஆண்டு தகுதிச்சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுது பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.74,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1091/2018)

<u>பழுதுபணிகள்</u>

1. ஆயில் பில்டர், ஏர் பில்டர், புதியது மாற்றுதல்
2. நான்கு வீல் கிரிஸ் செய்து பேரிங்குகள் சரி செய்தல்
3. ரேடியேட்டர் புதியது மாற்றுதல்,
4. வைப்பர் பிளேடு, வைப்பர் மோட்டார் புதியது
5. ஹைட்ரஜன் ஓரிங் ஆயில் சீல் புதியது மாற்றுதல், ஜாக்கி ஹைட்ராலிக், ஓரிங் ஆயில் ஆப்பரேட்டர் ஆயில் லீக் சரிசெய்தல், ஜாக்கி ஆயில், டேங்க் சரி செய்தல்
6. கம்ப்ளீட் வயரிங் செக்கப் செய்தல்
7. கம்ப்ளீட் வாட்டர் சர்வீஸ் பெயின்டிங் செய்தல்,
8. பட்டை தட்டு சரி செய்தல்

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.438 அனுமதிக்கப்பட்டது**

8) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN67W9206 மினி லாரி வாகனத்திற்கு 2018ம் ஆண்டு தகுதிச்சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுது பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.33,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1089/2018)

<u>பழுதுபணிகள்</u>

1. ரேடியேட்டர் லீக் சரி செய்தல், ஜோஸ் புதியது மாற்றுதல்
2. 4 வீல் கிரிஸ் பேக்கிங் செய்தல்
3. E.Oil, G-Oil புதியது பில்டர் புதியது மாற்றி சர்வீஸ் செய்தல்
4. வயரிங் செக்கப்
5. பெயிண்டிங் வேலை மற்றும் எழுத்து வேலை

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.439 அனுமதிக்கப்பட்டது**

**9)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN67W5356 டெய்லர் மற்றும் TN67W5357 டிராக்டர் வாகனத்திற்கு 2018ம் ஆண்டு தகுதிச்சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுது பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.49,500/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1098/2018)

<u>பழுதுபணிகள்</u>

1. டிராக்டரில் 6 வீல் கிரிஸ் செய்தல்
2. இன்ஜின் ஆயில் லீக் சரி செய்தல்
3. டெய்லரில் இருபக்கமும் தகடு பொரித்து வெல்டிங் செய்தல்
4. ஆயில், டீசல் மற்றும் சர்வீஸ் செய்தல்,
5. தார்பாய் புதியது மாற்றுதல்
6. வயரிங் வேலை செய்து பெயின்டிங் அடித்தல்,
7. ஓட்டுநர் இருக்கையை தைத்து சரி செய்தல்

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.440 அனுமதிக்கப்பட்டது**

**10)** இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் மூலதன நிதி கல்வி நிதிகளின் 2017–2018ம் வருடத்தின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2018–19ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (பி3/101/2018)

அ.கு– ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.441 அனுமதிக்கப்பட்டது**

**11)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தி வரும் புகை மருந்து அடிக்கும் இயந்திரத்தை பழுது பணிகள் பார்க்கும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. (எச்1/5607/2017)

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | பழுது பணிகள் பார்க்கப்படும் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 1 | சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு பண்டக சாலை , சென்னை | 1)Portal Fogging Machine | ரூ.2,300/– ஒரு எண்ணம் |
| | | 2) Carburetor | ரூ.6,500/– ஒரு எண்ணம் |
| | | 3) Bonjo Tubes | ரூ.7,005/– ஒரு எண்ணம் |
| | | 4) Nipple Set | ரூ.470/– ஒரு எண்ணம் |
| | | 5)Micoplug | ரூ.210/– ஒரு எண்ணம் |
| | | 6)Diaphram | ரூ.110/– ஒரு எண்ணம் |
| | | 7)valves | ரூ.100/– ஒரு எண்ணம் |
| | | 8)Motor power coil | ரூ.1,500/– ஒரு எண்ணம் |
| | | 9) Bolt, Nuts, Taflon tubes | ரூ.155/– ஒரு எண்ணம் |
| 2 | திரு கணேசியம் என்டர்பிரைசர்ஸ் 1/7 th மாடி நேரு நகர் சென்னை | 1)Portal Fogging Machine | ரூ.2,000/– ஒரு எண்ணம் |
| | | 2) Carburetor | ரூ.5,800/– ஒரு எண்ணம் |
| | | 3) Bonjo Tubes | ரூ.1,050/– ஒரு எண்ணம் |
| | | 4) Nipple Set | ரூ.1050/– ஒரு எண்ணம் |
| | | 5)Micro plug | ரூ.180/– ஒரு எண்ணம் |
| | | 6)Diaphram | ரூ.90/– ஒரு எண்ணம் |
| | | 7)valves | ரூ.90/– ஒரு எண்ணம் |
| | | 8)Motor power coil | ரூ.1,350/– ஒரு எண்ணம் |
| | | 9) Bolt, Nuts, Taflon tubes | ரூ.145/– ஒரு எண்ணம் |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி குடுத்துள்ள திரு கணேசியம் என்டர்பிரைசர்ஸ் நிறுவனத்தாருக்கு உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.442 அனுமதிக்கப்பட்டது**

12)அரசாணை எண்.118 (நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு (மாநகராட்சி2) துறை நாள்.26.09.2014ன் படி இந்நகராட்சி பகுதியிலுள்ள ஜவஹர் மைதானத்தில் 25.05.2015முதல் அம்மா உணவகம் தமிழக முதல்வரால் துவங்கப்பட்டு தினமும் 1200 இட்லி 300 சாம்பார் சாதம்

மற்றும் 300 தயிர்சாதம் முதலியன மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு தயாரிக்கப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அம்மா உணவகத்தில் பணியாற்றும் அமுதம் மகளிர் குழு 12 நபர்களுக்கு மாத ஊதியம் மற்றும் EPF பணம் உணவு தயாரிப்பதற்கு சிலிண்டர்கள் பலசரக்குகள் கூட்டுறவு மூலமும் காய்கறிகள் என்.கே.சந்திரன் மொத்த கமிஷன் கடை மூலமும் பால் விநியோகம் ஆவின் மூலமும் டோக்கன்கள் மற்றும் பதிவேடுகள் அச்சடிப்பதற்கு சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு சொசைட்டி கோவில்பட்டி மூலமும் மற்றும் அரிசி எடுப்பதற்கு D.D , ஏற்றுக்கூலி , இறக்குக் கூலி பணி வாடகை மற்றும் இதர சில்லரை செலவினங்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.60.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (அ1/3634/14)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.443 அனுமதிக்கப்பட்டது**

13) இந்நகராட்சிக்கு 2017–18ம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்கள் மற்றும் நிலுவை இனங்களை பொது மக்கள் உடனடியாக செலுத்த கோரி இந்நகர் பகுதி முழுவதும் ஆட்டோவில் ஒலிப்பெருக்கி வைத்து விளம்பரம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | ஜெய்ஹிந்த் விளம்பர ஆட்டோ | நாள் ஒன்றுக்கு ரூ.2000/– |
| 2 | சக்தி ஆட்டோ | நாள் ஒன்றுக்கு ரூ.2100/– |
| 3 | சிவா ஆட்டோ | நாள் ஒன்றுக்கு ரூ.2250/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வரிசை எண்.1ல் உள்ள ஜெய்ஹிந்த் விளம்பர ஆட்டோ நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(அ1/7189/2014)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.444 அனுமதிக்கப்பட்டது**

14) அம்மா உணவகத்தில் பணிபுரியும் அமுதம் மகளிர் குழு 12 நபர்களுக்கு EPF பணம் மே 2016 முதல் மார்ச் 2017 முடிய ரூ.2,52,437/–ம் மற்றும் ஏப்ரல் 2017 முதல் டிசம்பர் 2017 முடிய ரூ.2,02,192/–ம் ஆக மொத்தம் ரூ.4,54,629/– ஐ JKS Consultancy மூலம் Online மூலம் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (அ1–3634–2014)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.445 அனுமதிக்கப்பட்டது**

15) இந்நகராட்சிக்கு 2018–2019ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பேரேடுகள், கணினி பிரிவு டோனர்கள், இதர பொருட்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவு தொகை ரூ.30,00,000/– (முப்பது லட்சம்) ஆகும். எனவே பொருட்கள் கூட்டுறவு சொசைட்டி மூலம் வாங்கவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(பி2/1134/2015)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.446 அனுமதிக்கப்பட்டது**

16) அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ன் படி ஒன்பது ஆண்டுகள் குத்தகை முடிவடைந்த நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் காலியிடங்களை மறு நிர்ணயம் செய்து குத்தகைதாரர்கள் அதனை ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர அரசாணையில் தெரிவிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.1066/2015/அ4 நாள்.28.03.2017ன் படி நிர்ணயிக்கப்பட்ட குழுவின் படி மறுநிர்ணயம் வாடகையினை கடை குத்தகை ஏல உரிமையாளர்கள் ஒப்புக்கொள்ளாததால் 13.02.2018 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட கடைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | கடையின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் முகவரி | பழைய வாடகை | குழு நிர்ணயம் செய்த வாடகை | 13.02.2018 அன்று வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | எம்.யூ.டி.எப். கடை எண்.18 | கு.கார்த்திகேயன் 3,4 மாடசாமி நாடார் தெரு, முகவூர் | 1141 | 5000 | 5100 |
| 2 | பழைய பேருந்து நிலைய தெற்கு பக்க கடை எண்.1 | ரா.நீலாவதி, 267, முனியம்மன் கோவில் தெரு, இராஜபாளையம் | 1233 | 10000 | 6300 |

மேற்காணும் கடைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. வரிசை எண்.1ல் உள்ள கடை பழைய வாடகையின் காட்டிலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களால் குழு நிர்ணயிக்கப்பட்ட மறு நிர்ணய வாடகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் 1.3.2018 முதல் 28.02.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு (9ஆண்டு வரை மட்டும்) உரிமம் புதுப்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15 சதவீதம் வாடகையை விட உயர்வு செய்து உரிமம் வழங்கலாம்
2. வரிசை எண்.2ல் உள்ள கடை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களால் குழு நிர்ணயித்த மறு நிர்ணய வாடகையை காட்டிலும் மிகவும் குறைவாக உள்ளதால் மறு ஏலம்/ ஒப்பந்தபுள்ளி கோரலாம்.

**தீர்மானம் எண்.447 அனுமதிக்கப்பட்டது**

17)இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களை 2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ம் நாள் முதல் 2021ம் ஆண்டு மார்ச் திங்கள் 31ம் நாள் முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு பொது ஏலம் ஒப்பந்தபுள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(அ1/947/2015)

| வ.எண் | குத்தகை இனம் | டெபாசிட் தொகை | சால்வன்சி சான்று மதிப்பு ரூ. | சால்வன்சி பதில் செலுத்த வேண்டிய டெபாசிட் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000 | 5,00,000 | 2,00,000 |
| 2 | பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 3,00,000 | 50,000 |

குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியினை விளம்பரம்பரம் செய்யும் செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.448 அனுமதிக்கப்பட்டது**

18) இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட புகழேந்தி ரோட்டில் கதவு எண்.20, நகரளவு வார்டு– Cல் உள்ள கல்மண்டபம் இடம் தொடர்பாக திரு.ஆர்.என்.மணிகண்டன் என்பவரால், ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்ற மேல்முறையீடு வழக்கு எண்.5/2017 வழக்கில் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் நகர்மன்ற வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ் அவர்கள் ஆஜராகவும், மேற்படி வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எப்1/937/2018)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.449 அனுமதிக்கப்பட்டது**

19) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண்.245எ/18ல் நகராட்சி அனுமதியின்றி கட்டிடம் கட்டப்படுவதை நிறுத்தக் கோரி, திரு.கே.ஆர்.எஸ்.பொன்னுச்சாமி பாண்டியன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.2860/2018 வழக்கில் நகராட்சி ஆணையரை 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதி மதுரை கிளை வழக்கறிஞர் திரு.என்.திலிப்குமார் அவர்கள் ஆஜராகவும் மேற்படி வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எப்1)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.450 அனுமதிக்கப்பட்டது**

20) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு –H, பிளாக்–4, நகரளவு எண்.14/3,15,21,22,23/1, கதவு எண்.1, ஸ்ரீ பாரதி காட்டன் மில்ஸ் (பி.லிட்) சட்டத்திற்கு புறம்பாக மணல் தோண்டி எடுப்பது தொடர்பாக, திரு.எம்.எஸ்.டி.சி.ராதாராமன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு WP(MD)No.2958-2018 வழக்கில் நகராட்சி ஆணையரை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கறிஞர் என்.திலிப்குமார் அவர்கள் ஆஜர் ஆகவும் மேற்படி வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(1023/2018/எப்1)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.451 அனுமதிக்கப்பட்டது**

21) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆண்டத்ததம்மன் கோவில் தெருவில் வசிக்கும் திரு.சி.இராமகிருஷ்ணன் என்பவரால் இடம் தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதி மன்றத்தில் நகராட்சி ஆணையரை பிரதிாவதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.65/2018, இடைக்கால மனு 179/2018 வழக்கில் நகராட்சி சார்பில் திரு.கே.காளிதாஸ் நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜர் ஆகவும் மேற்படி வழக்கின் செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(6644/2017/எப்1)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.452 அனுமதிக்கப்பட்டது**

22) இந்நகராட்சியில் 01.04.2016 முதல் கீழ்க்கண்ட இனங்களுக்கு கீழ்க்கண்ட வாறு கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது

| | | | 1.4.2016க்கு முன்னர் பழைய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நான்குமால் அளவுகள் அளவீடு செய்வதற்கு | ரூ.500/– | ரூ.120/– |
| 2 | டவுன் சர்வே ரிஜிஸ்டர் நகல் மற்றும் வரைபட நகல் வழங்குவது | ரூ.200/– | ரூ.75/– |

சர்வே சம்மந்தமான தொடர்பு விளக்கப்பட்டியல் வழங்குவதற்கு தற்போது ரூ.100/– மட்டுமே வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. சர்வே சம்மந்தமான தொடர்புவிளக்கப்பட்டியலில் ஆரம்ப நகர் அளவிற்கு முன்பு உள்ளதும் ஆரம்ப நகரளவைப்படி உள்ளதும் மற்றும் துணை நகரளவைப்படியும் என மூன்று வகையாக அடங்கியுள்ளது. இதனடிப்படையில் மூன்று வகையான நகரளவை ஆவணங்களை சரிபார்த்து மனுதாரருக்கு தொடர்புவிளக்கப்பட்டியல் வழங்கப்பட வேண்டியுள்ளது . எனவே மேற்படி இனத்திற்கு தற்போது ரூ.100/– வசூல் செய்யப்படுவதை திருத்தி அமைத்து ரூ.500/– ஆக நிர்ணயம் செய்து 01.04.2018 முதல் வசூல் செய்யலாம். நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(2763/2009/எப்1)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.453 அனுமதிக்கப்பட்டது**

**23)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்காசி ரோடு கதவு எண்கள் **619,620** மற்றும் **621**ல் கட்டிடம் கட்டுவது தொடர்பாக திரு.டி.வெங்கடேஸ்வரன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட WP(MD)No.20780/2017 வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜர் ஆக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கறிஞர் என்.திலிப்குமார் அவர்களை கோரியதற்கும் மேற்படி வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(6132/2015/எப்1)**

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.454 அனுமதிக்கப்பட்டது**

**24)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்காசி ரோடு கதவு எண்கள் **619,620** மற்றும் **621**ல் நகராட்சி அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டி வருவதாக தெரிவித்து மேற்படி அனுமதிக்கு மாறானதை நிறுத்தக் கோரி டாக்டர்.எ.பி.கோபால முருகன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட WP(MD)No.20066-2017 வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜர் ஆக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கறிஞர் என்.திலிப்குமார் அவர்களை கோரியதற்கும் மேற்படி வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(6132/2015/எப்1)**

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.455 அனுமதிக்கப்பட்டது**

**25)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள **64** கழிப்பிடங்கள் அமைவிடம் விவரங்கள் பலகை வைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.**60800/–**க்கு மன்றம் தீர்மானம் எண்.**380** நாள் **28.12.2017**ல் அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து **26.02.2018** அன்று விலைப்புள்ளி கோரப்பட்ட போது வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் **(1231/2018/**E1)

| வ. எண் | விலைப்புள்ளியாளரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| **1.** | குமார்–ஆர்ட்ஸ் | **1**X800X64=51200 |
| **2.** | கனிஷ்கா கிராபிக்ஸ் | **1**X830X64=53120 |
| **3.** | சஜன் ஆர்ட்ஸ் | **1**X815X64=52160 |

அ.கு– வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகலில் குறைவாக கொடுத்துள்ள குமார் ஆர்ட்ஸ் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்

**தீர்மானம் எண்.456 அனுமதிக்கப்பட்டது**

26).இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் வார்டு 17 சர்ச் தெருவில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.7.50 லட்சத்தில் மதிப்பீட்டில் வேலை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது. பணி துவக்கப்பட்ட நிலையில் டாக்டர் A.பன்னீர் செல்வம் என்பவரால் கழிப்பறை கட்ட முதன்மை மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தடையாணை பெறப்பட்டுள்ளது. தடையாணை எண் (OS.268/2016) ஆகும் தடையானை பெறப்பட்டு தற்போது வழக்கு நடைபெற்று வருகிறது. மேற்படி பணி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ள திட்டமிட்டதால் வழக்கின் காரணமாக பணி நடைபெறாமல் தடைப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டப்பணி நிதியை முழுமையாக பயன்படுத்த ஏதுவாக வார்டு எண் 17 சர்ச் தெருவில் கட்ட திட்டமிடப்பட்ட சமுதாய கழிப்பறையில் வார்டு எண் 9 பெரிய மந்தை தெரு வடபுறம் புளியங்குளம் கண்மாய் அருகில் இடமாற்றம் செய்யவும், மேற்படி பணியை இவ்வலுவலக வேலை உத்திரவு ந.க.எண் இ1/2123/2015 நாள் 20.06.2016ன்படி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.N.சந்திரசேகரன் என்பவர் மூலம் பணி மேற்கொள்ளவும், சர்ச் தெரு வழக்கு முடிவுற்ற பின் தீர்ப்பின் அடிப்படையில் பொது நிதியின் கீழ் புதிய கழிப்பிடம் கட்டவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (2123/2016/E1)

அ.கு–

1.தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள நிதியை முழுமையாக பயன்படுத்தும் நோக்குடன் இந்நகர் வார்டு எண் 9 பெரிய மந்தை தெரு வடபுறம் புளியங்குளம் கண்மாய் அருகில் கழிப்பிடம் கட்ட மன்றம் அனுமதிக்கலாம்.

2.இத்திட்டத்தின் அடிப்படையில் பொது நிதியில் இருந்து சர்ச் தெருவில் கழிப்பிடம் கட்ட மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.457 அனுமதிக்கப்பட்டது**

27)இந்நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தில் பேருந்து வெளியேறும் வாயில் (out) நுழைவு வளைவு மிகவும் பழைமையானதாகி விட்ட படியால் அதன் உறுதி தன்மையை மதிப்பீடு முடியவில்லை. மேலும் மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த படியும், இராஜபாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின் படியும், மேற்படி வளைவினை இடித்து விட்டு புதிய வளைவு அமைக்கவும். மேற்படி பணியினை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள ஏதுவாக, உதவி கோட்ட பொறியாளர் பொதுப்பணி துறை கட்டிடம் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் கடிதம் மூலம் கோரப்பட்ட தடையின்மை சான்று வழங்கவும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது. (1166/2017/E1)

அ.கு– பழைய பேருந்து நிலையம் பேருந்து வெளியேறும் நுழைவு வாயில் வளையினை இடிக்கவும், தடையின்மை சான்று வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.458 அனுமதிக்கப்பட்டது**

28) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் துப்புரவு பணிகளுக்கு 2.50 $M^3$ கொள்ளவு கொண்ட டம்பர் பிளேசர் பின்கள் 36 எண்ணம் சப்ளை செய்ய 12.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஆறு ஒப்பந்த புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | EMD தொகை செலுத்தப்பட்ட விவரம் | சான்று |
|---|---|---|---|
| 1. | திரு.மதுசூதனன் | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று இணைக்கப்படவில்லை |
| 2. | M/S செல்வராம் எண்டர்பிரைசஸ் | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று உள்ளது |
| 3. | M/S சார்ப் சிஸ்டம் | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று உள்ளது |
| 4. | M/S சக்தி பாடி ஒர்க்ஸ் | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று உள்ளது |
| 5. | மானா மதுரை மாவட்ட கூட்டுறவு சொசைட்டி | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று உள்ளது |
| 6. | மதுரை மாவட்ட கூட்டுறவு சொசைட்டி | செலுத்தப்பட வில்லை | S.S.I. சான்று உள்ளது |

ஒப்பு நோக்கு பட்டியல்

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த தொகை (எண்ணம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1. | திரு.மதுசூதனன் | ரூ.47500 /– |
| 2. | M/S செல்வராம் எண்டர்பிரைசஸ் | ரூ.49000 /– |
| 3. | M/S சக்தி பாடி ஒர்க்ஸ் | ரூ.55000 /– |
| 4. | M/S சார்ப் சிஸ்டம் | ரூ.54700 /– |
| 5. | மானா மதுரை மாவட்ட கூட்டுறவு சொசைட்டி | ரூ.62000 /– |
| 6. | மதுரை மாவட்ட கூட்டுறவு சொசைட்டி | ரூ.58500 /– |

வரப் பெற்ற ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–01 S.S.I. சான்று இணைக்கப் படவில்லை மேலும் மேற்படி நபர் குறித்த காலத்திற்குள் டம்பர் பிளேசர் பின்கள் சப்ளை செய்யவில்லை என விருதுநகர் நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானம் எண் 106 நாள் 30.10.2012 அன்னாரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படியாரின் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம்.

இரண்டாவதாக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S செல்வராம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் இதற்கு முன் இது போன்ற டம்பர் பிளேசர் பின்கள் சப்ளை செய்ததற்கு சான்று (செயல்திறன் சான்று) சமர்ப்பிக்குமாறு இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்ட போது மேற்படி நிறுவனம் செயல்திறன் சான்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.(8865/2017/E1)

அ.கு– வரப்பெற்ற ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 திரு.மதுசூதனன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம். அடுத்த நிலையில் குறைந்த விலைப்புள்ளியை ரூ.49000/– கொடுத்துள்ள M/S செல்வராம் எண்டர்பிரைசஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் .

**தீர்மானம் எண்.459 அனுமதிக்கப்பட்டது**

**29)** இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கு நிறுவப்பட்ட இயந்திரங்களை பாதுகாப்பாக வைக்க மேற் கூரையுடன் செட் போடவும் ஒப்பந்தப்ணிக்கும் பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் பின் **36** எண்ணம் சப்ளை செய்யும் ஒப்பந்தப்புள்ளியை விளம்பரம் செய்ய மக்கள் தொடர்பு அலுவலர் விருதுநகர் அவர்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகம் மாலை தமிழகம் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி நாளிதழில் **21.12.2017** அன்று விளம்பரம் செய்யப்பட்டது. எனவே மேற்படி நாளிதழுக்கு விளம்பர கட்டணம் ரூ. **14962/–** வரிகள் உட்பட (ரூபாய் பதினான்கு ஆயிரத்தி தொள்ளாயிரத்தி அறுபத்தி இரண்டு மட்டும்) செலுத்தப்பட வேண்டும் மேற்படி தொகை ரூ.**14962 /–** (ரூபாய் பதினான்கு ஆயிரத்தி தொள்ளாயிரத்தி அறுபத்தி இரண்டு மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(8865/2017/**E1)

அ.கு–
1.மேற்படி விளம்பரக்கட்டணம் தொகை செலுத்த அனுமதிக்கலாம்
2.செலவு தொகையை பொது நிதியில் இருந்து வழங்கலாம்

**தீர்மானம் எண்.460 அனுமதிக்கப்பட்டது**

**30)** இந்நகர் தென்காசி ரோட்டில் அமைந்துள்ள P.S.K.குமாரசாமி ராஜா பூங்கா நுழைவாயில் முன்பு கழிவு நீர் தேங்கியும் பாலம் பழுதடைந்து கழிவு நீர் செல்ல வழியில்லாமல் உள்ள காரணத்தினால் மேற்படி பூங்கா உட்புறம் தளத்திற்கு ஏற்ற வகையில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்க்கொள்ள ரூ.**2.20** (ரூபாய் இரண்டு லட்சத்தி இருபது ஆயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து நகர் மன்றத்தீர்மான எண் **430** நாள் **12.02.2018**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு **09.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். **(1207/2018/**E1)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | திரு.சி.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகையை விட 2.26 % அதிகம் |
| 2. | திரு.ஏ.பி.முத்துகிருஷ்ணராஜா | மதிப்பீட்டு தொகையை விட 0.06 % குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையை விட **0.06** % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஏ.பி.முத்துகிருஷ்ணராஜா என்பவர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.461 அனுமதிக்கப்பட்டது**

**31)** இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.**11** கனகராஜ் மருத்துவமனை அருகில் உள்ள வால்வு தொட்டி பழுது மற்றும் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட சாலை சேதாரத்தினை சீர்செய்தல் மேலும் சாலையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**45,000/–** (ரூபாய் நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (இ**2/2017)**

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஏ.பி.முத்துகிருஷ்ணராஜா என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.462 அனுமதிக்கப்பட்டது**

32) இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN67AV6792 வாகனத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 9.2.2018 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (இ2/6198/2017)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | M/s.மகேஸ்வரி மோட்டார்ஸ்<br>119, காமராஜர் நகர் இராஜபாளையம் | ரூ.71,015/– |
| 2 | M/s.ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ்<br>354, முடங்கியார் தெரு,இராஜபாளையம் | ரூ.64,275/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் குடுத்துள்ள M/s.ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ் இராஜபாளையம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.463 அனுமதிக்கப்பட்டது**

33) இராஜபாளையம் நகராட்சி குடிநீர் திட்டம் குடிநீர் பராமரிப்பு பணிகள் 2018–19ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள் உந்து குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (இ2/001226/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.464 அனுமதிக்கப்பட்டது**

34) இராஜபாளையம் நகராட்சி பகுதியில் குடிநீர் அல்லாத உபயோகத்திற்காக 571 எண்ணம் இந்தியா மார்க் II கைப்பம்புகள் உள்ளது. இக்கைபம்புகளை 2018–19ம் ஆண்டிற்கு பழுது மறறும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (இ2/001227/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.465 அனுமதிக்கப்பட்டது**

35) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 42 வரையிலான வார்டுகளில் குடிநீர் அல்லாத உபயோகத்திற்காக 657 எண்ணம் ஆள்துளை கிணறுகள் சிறு விசை மினி பவர் பம்புகள் உள்ளது. மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது கழிவறை மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் ஆள்துளை கிணறு அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஆள்துளை கிணறுடன் கூடிய மின் மோட்டார் 2018–19ம் ஆண்டிற்கு பழுது மறறும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (இ2/001225/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.466 அனுமதிக்கப்பட்டது**

36) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.28 சத்திரப்பட்டி ரோடு இரயில்வே கேட் கிழக்கு பக்கம் சண்முகர் மில்ஸ் ரோட்டிற்கு 15 மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு 1.15 லட்சம் மதிப்பீட்டில் 21.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது, ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் (இ1/5582/2017)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | M/s.தாஸ்பான் இன்டஸ்ட்ரீஸ்<br>54, டி.ஜி நகர், 44வது தெரு,<br>நங்கநல்லூர், சென்னை | மதிப்பீட்டு தொகையை விட 1.48% சதவீதம் அதிகம் |
| 2 | M/s.ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பிரைவேட் லிட்,<br>சென்னை | மதிப்பீட்டு தொகையை விட 0.01% சதவீதம் குறைவு |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தங்களில் மதிப்பீட்டு தொகையை விட 0.01% சதவீதம் குறைவான விலை விகிதம் குடுத்துள்ள M/s.ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பிரைவேட் லிட் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க்கலாம்.
3. தெரு விளக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.467 அனுமதிக்கப்பட்டது**

37) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.9,10,24,5,42,11 ஆகிய வார்டுகளில் மினி Mini OHT HDPE Tank பழுதடைந்த நிலையில் உள்ளது பழுதான HDPE Tankஐ அகற்றி புதிதாக HDPE Tank அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.60,000/–க்கு (ரூபாய் அறுபதாயிரம் ) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.468 அனுமதிக்கப்பட்டது**

38) இராஜபாளையம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட மதுரை – தென்காசி சாலை ரயில்வே பீடர் ரோடு சந்திப்பில் நெடுஞ்சாலை துறையினரால் சாலை அமைக்கப்பட்ட பிறகு ரயில்வே பீடர் ரோடு பெல் மவுத் பகுதி பள்ளமாகி விட்டது மேற்படி பள்ளம் வாகன போக்குவரத்துக்கு மிகவும் இடையூராக இருப்பதால், மேற்படி பகுதியை நெடுஞ்சாலை துறை சாலை மட்டத்திற்கு உயர்த்தி அமைக்கவும், T.P.மில்ஸ் ரோடு ரோட்டில் பருவ மழையால் சேதமாகி விட்ட இடங்களில் கனரக போக்குவரத்தின் கருதி பேட்ஜ் பணி மேற்கொள்ளவும், நகர் மன்ற தீர்மானம் எண் 379 நாள் 28.12.2017ல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் 27.02.2018 அன்று ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் (இ1/405/2018)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | C.குழந்தை வேலு | மதிப்பீட்டு தொகையை விட –0.04 % குறைவு |
| 2. | ஏ.சி.வேலாயுதராஜா | மதிப்பீட்டு தொகையை விட 3.39 % அதிகம் |

அ.கு– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை விட –0.04 % குறைவாக கொடுத்துள்ள C.குழந்தைவேலு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.469 அனுமதிக்கப்பட்டது**

39) இராஜபாளையம் நகராட்சியில் NULM – DEENDYAL ANTOYODAYA YOJANA 2017-2018 திட்டத்தின் கீழ் மதுரை–தென்காசி சாலையில் அமைந்துள்ள அரசு மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு தங்குமிடம்(SpecialShelter) கட்டவும் அதற்கான மதிப்பீடு ரூ.42.00லட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானஎண்.428 நாள்.12.02.2018.ன் படி நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மண்டல செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு மண்ணின் தாங்குதிறன் (SBC) அடிப்படையாக கொண்டு Structural design , Drawings, உள்ளிட்ட விரிவான மதிப்பீடுகள் கலந்தறிதற்குரியர் ஒருவரை நியமனம் செய்து தயார் செய்ய வேண்டியுள்ளது. எனவே மதிப்பீடுகள் தயார் செய்ய கலந்தறிதற்குரியர் நியமனம் செய்யவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.94500/.ற்கு மட்டும் மன்றத்தின் நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது. (இ1/1714/2018)

அ.கு :–

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.470 அனுமதிக்கப்பட்டது**

40) இராஜபாளையம் நகராட்சியில் NULM – DEENDYAL ANTOYODAYA YOJANA 2017-2018 திட்டத்தின்கீழ் மதுரை–தென்காசி சாலையில் அமைந்துள்ள அரசு மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு தங்குமிடம் (Special Shelter) கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தகுதி வாய்ந்த கலந்தறிதற்குரியர் நியமனம் செய்ய 19.02.2018 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.( இ1/1714/2018)

| வரிசை எண் | கலந்தறிதற்குரியர் விபரம் | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s. அயோத்திகன்சல்டன்சி<br>112,காமராஜர் நகர்,<br>இராஜபாளையம். | மதிப்பீட்டுத் தொகையைவிட 1.19 %குறைவு (ரூ.83000/.) |
| 2. | M/s. ஸ்ரீ கிருஷ்ணாகன்சல்டன்சி<br>பிளாட் எண்.2, எஸ்.எஸ்.காலனி ,மதுரை. | மதிப்பீட்டுத் தொகையைவிட 2.38 %அதிகம் (ரூ.86000/.) |

அ.கு .

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/s.அயோத்தி கன்சல்டன்சி இராஜபாளையம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.471 அனுமதிக்கப்பட்டது**

41) இராஜபாளையம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பி.ஏ.சி.ஆர் சாலையில் அமைந்துள்ள ஆணையாளர் மற்றும் நகராட்சிபொறியாளர் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச்சுவர் புதியதாக கட்டி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.9.00 லட்சத்திற்கு மட்டும் நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது. (இ1//2018)

அ.கு.

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.472 அனுமதிக்கப்பட்டது**

42) இராஜபாளையம் நகராட்சி எல்கைக்குட்பட்ட மதுரை–தென்காசி நெடுஞ்சாலையில் செவல்பட்டி தெருசந்திப்பு முதல் பி.எஸ்.கேபார்க் வரையிலும் பி.ஏ.சி.ஆர் சாலையில் ஆனந்த்தியேட்டர் மேற்குப்பகுதியிலும் அவ்வப்போது ஏற்படும் விபத்துகளை தடுக்க குறுக்கு தெருக்களில் வேகத்தடை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.2.40 லட்சத்திற்கு மட்டும் நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது.( இ1//2018)

அ.கு.

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.473 அனுமதிக்கப்பட்டது**

43) இராஜபாளையம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 3வதுவார்டு அழகாபுரியில் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறுபாலத்தை பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.35000/–ற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ1//2018)

அ.கு.

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.கே.தங்கம் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு செய்யவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.474 அனுமதிக்கப்பட்டது**

44) இராஜபாளையம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 15வதுவார்டு நாடார்சாவடி தெருவில் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறுபாலத்தை பழுது நீக்கம் செய்யும் பணிமேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.45000/.ற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ1//2018)

அ.கு

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வி.சந்திரசேகரன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு செய்யவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.475 அனுமதிக்கப்பட்டது**

**45)** இந்நகராட்சி கோடை குடிநீர் தேக்கத்திலிருந்து நகரின் மேல்நிலை தொட்டி வரை இடைப்பட்ட பகுதியில் இரண்டு இடங்களில் புதிய சுத்த நீர் உந்து குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாக வெளியேறிக் கொண்டிருக்கிறது. மேற்படி பகுதியில் குழாய் உடைப்பை சரி செய்து பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.20,000/.ற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.( இ2//2018)

அ.கு –

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் வீணாவதை தடுக்கும் பொருட்டு இப்பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர்.வின்சென்ட்செல்வராஜ் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு செய்யவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.476 அனுமதிக்கப்பட்டது**

**46)** இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.**39**ற்குட்பட்ட பகுதிகளில் வால்வு தொட்டிகள் சிதிலமடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு ரூ.**2.00** லட்சம் மதிப்பீட்டில் **21.02.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.கே.பாலமுருகன் | மதிப்பீட்டு தொகையை விட **0.04** % குறைவு |
| 2. | திரு.சி.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகையை விட **0.86** % அதிகம் |

அ.கு–

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை விட **0.04** % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.பாலமுருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.477 அனுமதிக்கப்பட்டது**

47) இராஜபாளையம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் வடபுறம் தண்ணீர் வசதிக்காக குழாய் அமைக்கவும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேல்நிலை தொட்டியில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.11,000/—க்கு (ரூபாய் பதினோராயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்படைப்பு பணியாளர் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பாலமுருகன் என்பவர் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.478 அனுமதிக்கப்பட்டது**

48) இந்நகராட்சி மாடசாமி கோவில் தெரு ரோட்டில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து மையம் எண் 07ல் தளம் கதவு கழிப்பறை உள்ள பகுதிகளை பழுது மற்றும் பராமரிப்பு செய்யவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.49,000/- (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) செய்தும்,அவசர அவசியம் கருதியும் மதிப்பீட்டு தொகையில் இப்பணியினை செய்யவும் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.கே.தங்கம் என்பவர் மூலம் அப்பணியினை செய்யவும் நிர்வாக அனுமதியும் மற்றும் மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு— மேற்படி பணியினை செய்ய நிர்ாவக அனுமதியும் மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.கே.தங்கம் என்பவர் மூலம் செய்யவும் செலவுத் தொகை பொது நிதியிலிருந்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.479 அனுமதிக்கப்பட்டது**

49) இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக் காலம் 31.03.2018ல் முடிவடைவதால் 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்தை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 27.03.2018ல் கோரப்பட்டதில் மேற்படி தேதியில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரண்டு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சென்ற குத்தகை தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.டி.செல்வகுமார்<br>257, தாட்டு முத்து தெரு<br>சிவகாசி | 11,25,000 | 13,02,330/— |
| 2 | திரு.எம்.பழனிச் செல்வம்<br>33, நாடார் நடுத் தெரு,<br>திருத்தங்கல் | —— | 10,00,000/— |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் புதிய பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு திரு.டி.செல்வகுமார் என்பவர் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக ரூ.13,02,330/—க்கு கேட்டுள்ளார். திரு.டி.செல்வகுமார் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(அ1/947/2015)

அ.கு— மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.480 அனுமதிக்கப்பட்டது**

50) இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக் காலம் 31.03.2018ல் முடிவடைவதால் 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்தை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 27.03.2018ல் கோரப்பட்டதில் மேற்படி தேதியில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரண்டு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சென்ற குத்தகை தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.டி.செல்வகுமார்<br>257, தாட்டு முத்து தெரு<br>சிவகாசி | 1,71,000 | 1,98,000/— |
| 2 | திரு.எம்.பழனிச் செல்வம்<br>33, நாடார் நடுத் தெரு,<br>திருத்தங்கல் | —— | 1,20,000/— |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் பழைய பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு திரு.டி.செல்வகுமார் என்பவர் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக ரூ.1,98,000/—க்கு கேட்டுள்ளார். திரு.டி.செல்வகுமார் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(அ1/947/2015)

அ.கு— மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.481 அனுமதிக்கப்பட்டது**

51) இந்நகராட்சி அலுவலகம் பணியாளர்கள் அலுவலக பணி நிமிர்த்தம் வெளியூர் சென்று வருபவர்களுக்கு பயணப்பட்டியல் வழங்குவதற்கு நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு இந்நகர் மன்றத் தீர்மான எண் 6 நாள் 21.05.2009ன்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மாதம்தோறும் பயணப்பட்டியல் வழங்குவதற்கு அதற்கான செலவுத்தொகைக்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. (7217/2008/பி4)

அலுவலக குறிப்பு

இந்நகர் மன்றத்தீர்மான எண் 69 நாள் 31.08.2017ல் 2018–2019ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் பயணப்படி வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே 2018–2019ம் ஆண்டுக்கான பயணப்படி செலவு தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.482 அனுமதிக்கப்பட்டது**

52) இந்நகராட்சி பகுதியில் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் இனத்தில் உள்ளவர்கள் காலமானால் அதற்கு அரசு வழங்கும் ஈமச்சடங்கு மானியம் ரூ.2500/– வீதம் அரசு நிதியிலிருந்து வழங்கப்படும்.

ஆனால் தற்போது 2016–2017 மற்றும் 2017–18க்கான மானியத் தொகைக்கான மானியத் தொகை ஏதும் வரப்பெற வில்லை 2016–17, 2017–18 ஆண்டிற்கான மானியம் கோரி வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கு ரூ.2500/– வீதம் வழங்க வேண்டி உள்ளது. தற்போது பொது மக்கள் நலன் கருதி ஈமச்சடங்கு உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூ.50,000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மேற்படி அரசு மானியம் வந்தவுடன் பொதுநிதிக்கு வரவு வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(489/18/எச்2)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அரசு மானியம் வந்தவுடன் பொதுநிதிக்கு வரவு வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.483 அனுமதிக்கப்பட்டது**

53) இந்நகராட்சி வார்டு எண்.16 ஊரணிப்பட்டி தெரு, திரு/திருமதி.சதீஸ்குமார், கார்த்திகா என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர், மாவ்டட உரிமையில் நீதிமன்ற சப்–கோர்ட் OS.No.394/2017ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு தொடர்பான மேல் நடைவடிக்கை மேற்கொள்ள நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ் அவர்கள் மேற்கொள்ளவும், வக்காலத்து தாக்கல் செய்யவும் கேட்டுக் கொள்ளலாம். மேலும் மேற்படி வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(6726/15/அ2)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.484 அனுமதிக்கப்பட்டது**

54) இந்நகர் வார்டு எண்.11ல் அமைந்துள்ள ஏ.கே.டி.தர்மராஜா கல்வி தர்ம ஸ்தாபனம், இராஜபாளையம் என்பவருக்கு சொந்தமான கடைகளுக்கான சொத்துவரி உயர்வு குறித்து வாதுரையில் உள்ள Plaint A Schedule Listல் கண்ட வரிசை எண்.1 முதல் 122 வரை கண்ட வரி விதிப்பு எண்கள். முறையே. 1)16251–16293, 2)16337–16346, 3)65130–65161, 4)65251–65362, 5)65408–65410, 6)65423, 7)16375–16382, 8)16386–16397 ஆகியவைகளுக்கு இவ்வலுவலக 6.12.2017ம் தேதிய கேட்பு அறிவிப்பு படி சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் இதனை எதிர்த்து ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். OS.No.23/2018 ன் படி வாதியின் வழக்கறிஞர் திரு.டி.முத்துக்குமார்,பி.எல்., அவர்கள் மூலம் 19.01.2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கனை இந்நகராட்சி வழக்கறிஞர்

திரு.கே.காளிதாஸ் வழக்கறிஞர் மூலம் வழக்கினை மேற்கொள்ளவும், இதற்கான வழக்கு செலவினை மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(650/2018/அ2)

அ.கு– இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ் அவர்கள் மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.485 அனுமதிக்கப்பட்டது**

55) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர், நாள்.15.03.2018. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்–1920 பிரிவு 83 உட்பிரிவு 5. தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண்.33, நாள்.25.01.2018ன் படியான சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சி பகுதிகளில் உள்ள அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும், எனவும் இச்சொத்தவரியினை 2017–2018 இரண்டாம் அரையாண்டுக்குரிய கேட்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.(எ1/9112/2010)

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.486 அனுமதிக்கப்பட்டது**

ஒம்/எஸ்.சசிகலா
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி